**சக்தி பௌண்டேஷன் - தமிழ் CCC வகுப்பு**

**பக்தியே முக்கியம்!**

---

பூபாலன் திருமலைக்கு மேல் உள்ள பழங்குடி கிராமம் ஒன்றில் வாழும் மலை ஜாதிக்காரன். ஆனால் அவனுக்குத் திருமலை ஸ்வாமியிடம் ஆழ்ந்த பக்தியும் நம்பிக்கையும் உண்டு.

வாரம் ஒரு முறை அவன் தான் சேகரிக்கும் மலைத்தேனைக் கொண்டு வந்து அதை பக்தர்களுக்கு விற்று, வரும் பணத்தில் ஒரு பங்கை வெளியில் உள்ள உண்டியலில் அர்ப்பணிப்பான்.

இதை உணர்ந்த திருமலைக் கோயில் அர்ச்சகர் ஒருவர் அவனுக்கு குருவாக இருந்து வழிநடத்த ஆசைப் பட்டு அவனை அழைத்துப் பேசினார். அவனுக்கோ கொள்ளை இஷ்டம் ஆயிற்று.

அவன் பக்குவத்துக்கு ஏற்ப அவனுக்கு சில வழிபாட்டு முறைகளைக் கூறி வழிகாட்டிட, அவனும் மிக்க மகிழ்ச்சியுடன் தினமுமே கோயிலுக்கு வந்து ஒரு மரத்து அடியில் உட்கார்ந்து தன் குரு தந்த மந்த்ரங்களை மனசார ஜெபித்துக் கொண்டு வழிபடுவான். காலம் சென்றது....

பல ஆன்மீக விஷயங்களை அறிந்து கொள்ளும் ஆர்வத்தில் அவன் தெலுங்கு மொழி கற்கத் தொடங்கினான். போகப் போக ஓரளவுக்கு அதை வாசிக்கக் கற்றுக் கொண்டான். இதனால் அவன் பல விஷயங்களைப் படித்துப் பொது அறிவையும் வளர்த்துக் கொண்டான், அதனால் அவன் வாழ்க்கைத் தரமும் பொருளாதாரமும் கூட உயர்ந்தது.

அப்போது ஒரு நாள் அவன் திருமலைக் கடை ஒன்றில் ஸ்ரீவிஷ்ணு சஹஸ்ரநாமம் புஸ்தகம் தெலுங்கு மொழில் பார்த்தான். அவனுக்குள் ஒரே ஆசை! கோயிலில் தினமும் சொல்கிறார்களே! நாமும் வாசித்துப் பழகினால் என்ன? உடனே வாங்கி விடுகிறான்.

தினமும் கோயிலில் சொல்லும் சகஸ்ரநாமம் வெளியில் கேட்கும். அதைக் கேட்டுக் கேட்டு, புஸ்தகத்தைப் பார்த்து இவனும் சொல்லி மகிழ்வான். தினம் தினம் தன்னால் வாய்க்கு வந்த நாமங்களைச் சொல்லி இன்புறுவான். இறைவனின் பெருமையை எண்ணி எண்ணி மகிழ்வான். தனக்கு இப்பேறு கிடைத்தற்கு நன்றி சொல்வான் பூபாலன்.

ஒரு நாள் இவன் கூட்டம் இல்லாத சமயத்தில் கோயில் முன் நின்று சற்று உறத்த குரலில் சகஸ்ரநாமம் சொல்கிறான், அவ்வழியே வந்த அவன் குரு அதைக் கேட்டு மிகவும் கோபப்பட்டுக் கொண்டு, "மூடா! உன்னை யார் இதை எல்லாம் சொல்லச் சொன்னது? அதெல்லாம் நியம நிஷ்டைகள் கொண்டு சரியான உச்சரிப்புடன் சொல்ல வேண்டும், தப்பும் தவறுமாக சொல்லிப் பாவத்தைச் சேர்த்துக் கொள்கிறாயே! ஏதோ கோவிந்தா ராமா என்று சொல்வதை விட்டு விட்டு இதை யார் சொல்ல உனக்கு அதிகாரம் தந்தது?" என்று திட்டிவிட்டு அவனையும் விரட்டிவிட்டார்.

அன்று முதல் பூபாலன் கோயில் பக்கமே வருவதில்லை.காலம் சென்றது.

புரட்டாசி ப்ரஹ்மோத்சவம்! கொடி ஏறி விட்டது. அன்று ஆதிசேஷ வாஹனத்தில் பெருமாள் ஸ்ரீமலையப்ப ஸ்வாமி புறப்பாடு! பெருமாளுக்கு அலங்காரம் செய்ய வேண்டிய கட்டளை அன்று பூபாலனின் குருவுக்கு. பாவம்! எவ்வளவோ செய்தும் அலங்காரம் அமையவே இல்லை. மற்ற அர்ச்சர்களுக்கும் அதிர்ச்சி! என்ன அபச்சாரம் செய்தோமோ? என்று கலங்கினர். எப்படியோ பெருமாளை வாஹனத்தில் ஏற்றிக் கொண்டு மழைச் சாரல் அடிக்கும் அந்த அழகிய காலைப் பொழுதில் மலையப்ப ஸ்வாமி புறப்பாடு ஆனார். கூட்டமோ கூட்டம்! எங்கும் சதா கோவிந்த நாம கோஷம்!

ஒரு கட்டம் வந்தவுடன் வாஹனத்தை மேற்கொண்டு அசைக்க முடியாமல் ஸ்ரீபாதம் தாங்கிகள் [இறைவனைத் தூக்கும் அன்பர்கள்] கலங்கினர். பூபாலனின் குருவுக்குள் அதீத பயமே ஏற்பட்டு விட்டது!

"ஹே! ஸ்வாமி! அடியேன் ஏதாவது தப்போ தவறோ செய்தால் மன்னித்து உணர்த்த வேண்டும்!" என்று உண்மையான பக்திஸ்ரத்தையுடன் அவர் வேண்ட, இறைவன் ஒரு அன்பர் மேல் ஆவேசித்து,

"***என் பக்தன் ஒருவன் சில காலமாகச் சொன்ன மழலை மொழி சஹஸ்ரநாமம் நம் காதுகளில் விழாமல் தவியாய்த் தவிக்கிறோம்! அவன் எங்கே? அவன் நாமத்துடன் செய்யும் பக்தியும், என்னைப் பற்றிய நினைவும் என்னை மேலும் உருக்கிற்று! அவன் இக்கூட்டத்தில் இருக்கிறான்! அவன் சஹஸ்ரநாமம் சொன்ன பிறகே நாம் மேலே செல்வோம்!***" என்று கூறிட,

”ஹே! என்னப்பா! பூபாலா! எங்கே அப்பா! இருக்கிறாய்! மலையப்பன் தேடுகிறார்! வா!” என்று குரு கத்த

”குரு நாதா!” என்று அவரை வந்து வணங்கினான் பூபாலன். அவனிடம் மன்னிப்புக் கேட்ட குரு அவனை சஹஸ்ரநாமம் சொல்லச் சொன்னார். அவனோ மிக அற்புதமாகச் சொன்னான்.ஸ்வாமியும் புறப்பட்டார்!

”ஐயா! தாங்கள் என்னைத் திட்டியதன் காரணம் எனக்குப் புரிந்தது. அதனால் தான் தினமும் கோயிலின் பாடசாலையில் சொல்லும் சஹஸ்ரநாமத்தைக் கேட்டுக் கேட்டு ஓரளவுக்கு இறைவனின் அருளால் இன்று சொன்னேன்!” என்று கூறிட, அவனை அணைத்துக் கொண்டு அன்று முதல் பல விஷயங்களை அவனுக்கு அவர் கற்றும் தந்தார்.

எதைச் செய்தாலும் அதில் perfection மிக முக்கியம். அதற்கு முன் ஸ்ரத்தையும் முக்கியம். பக்தி கலந்த வழிபாட்டில் தவறுகள் விதிவிலக்கே! ஆனால் அன்பர்கள் போகப் போக அவற்றை முறைப்படுத்திக் கொள்ளவும் வேண்டும்.

ஓம் நமோ நாராயணாய!